2016 ஆகஸ்ட் 8]

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யும் என்று அறிவித்தமைக்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதிவாழ் மக்கள் சார்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

சிற்றுந்து

***68 திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா -

மதுரை மாநகருக்கும் சிற்றுந்து சேவையினை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை மாநகர மக்களுடைய போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னையிலே 200 சிற்றுந்துகளை இயக்குவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, சென்னையில் மட்டும், 200 சிற்றுந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் பரிந்துரை செய்து, மதுரை மாநகருக்கும் அந்த சிற்றுந்து வசதியை ஏற்பாடு செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகர மக்கள் சிரமமின்றிப் பயணம் செய்திட அனைத்துப் பகுதிகளுக்கும், அனைத்து சாலைகளிலும் சென்றுவர ஏதுவாக சிற்றுந்து எனப்படும் small bus-களை இயக்கி, இன்றையதினம் போக்குவரத்துக் கழகத்தில் முன்னோடி மாநிலமாக தமிழகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடையேழு வள்ளல்களின் சாதனைகளையும் தன் கடைக்கண் பார்வையில் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையில் இன்றைக்குப் பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறார்கள். தோகை விரித்தாடும் மயில், கடும் குளிரில் நடுங்கி உடல் குறுகி நின்றபோது, மயிலுக்குப் போர்வை தந்த பேகன் போல, இந்தியாவிலேயே முதல்முறையாக முதியோர்களுக்கு அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ் வழங்கி, மூத்த குடிமக்களின் துயர் துடைத்து மகிழ்ந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைக்குத் தேர் தந்த பாரி போல, பள்ளி மாணவ, மாணவியர்கள் கல்வி கற்கச் செல்ல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையேழு வள்ளல்களில், மயிலுக்குப் போர்வை தந்த பேகன் போல, முல்லைக்குத் தேர் தந்த பாரி போல, தனது வலிமையான குதிரைகளைப் பரிசாக வழங்கிய காரியைப்போல, கலிங்கம் என்ற ஆடையையும் இரவலர்களுக்கு வழங்கி மகிழ்ந்த ஆயியைப்போல, அமிழ்தம் என்ற நெல்லிக்கனியை ஔவைக்குத்

தந்த அதியமான்போல, பசிப் பிணியோடு வாடிய இரவலர்களுக்கு வேண்டிய பொருட்களை வாரி வழங்கி மகிழ்ந்த நள்ளியைப்போல, கலை வல்லுநர்களுக்கும் வளமான நாடுகளையே பரிசாக வழங்கி மகிழ்ந்த ஓரியைப்போல, கடையேழு வள்ளல்களின் ஒட்டுமொத்த உருவமாகத் திகழ்ந்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10—55

பெரிய பேருந்துகள் போக முடியாத மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயிலைச் சுற்றியுள்ள மாசி வீதிகள், ஆவணி மூல வீதிகள், மக்கள் நெருக்கடி மிகுந்த செல்லூர் பகுதிகளான 50 அடி சாலை, 60 அடி சாலை, லூர்து நகர் பகுதிகள், நகரத்தை ஒட்டியுள்ள விரிவாக்கப் பகுதிகளான பாரத் நகர், E.B. Colony, அந்தநேரி, சம்பக்குளம், மங்கலக்குடி, மஸ்தான்பட்டி, யாகப்பநகர், வண்டியூர் பகுதி, பாக்கியநாதபுரம், ஜெய்ஹிந்த்புரம், காமராஜபுரம், நிலையூர் நெசவாளர் காலனி போன்ற பகுதிகளுக்கு small bus இயக்கப்பட்டால், போக்குவரத்து நெருக்கடி மிகவும் குறையும். அதுமட்டுமல்ல; சிற்றுந்து, small bus என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த சின்னம், வெற்றியின் சின்னம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முழுமையான சிற்றுந்துத் திட்டத்தினை அன்புகூர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, மதுரைக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

வெள்ளி ரதம்

***578—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, படவேடு ஊராட்சி ஒன்றியம், அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலுக்கு வெள்ளி ரதம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்ட இடம் துலங்கவரும் பொன்மனத் தாய், கால் பட்ட இடமெல்லாம் கருணை நிறைந்து நிற்கும் தர்மத் தாய், தமிழகத்திற்குத் தேவையான உரிமைகளை மீட்டெடுப்பதில் வல்லமை படைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் பதிலைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில், 809 திருக்கோயில்களுக்கு சொந்தமாக 989 மரத் தேர்கள் உள்ளன. மேலும் 52 திருக்கோயில்களில், தங்க ரதமும், 42 திருக்கோயில்களில் வெள்ளி ரதமும் பக்தர்களின் வழிபாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் 144 திருக்கோயில்கள் ரூ.16.24 கோடி செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.